**அறுவடையின் போது சூரியகாந்தி விதைகளின் விலை நிலையாக இருக்கும்**

சூரியகாந்தி எண்ணெய் உணவுத்துறைகளில் அதிகமாக பயன்படுத்தப்படும் எண்ணெயாகும். இந்தியாவின் எண்ணெய் பிழிதல் (SEAI) அமைப்பின்படி, நடப்பு ரபீ பருவத்தில் சூரியகாந்தி 1.74 இலட்சம் எக்டர்கள் விதைக்கப்பட்டுள்ளது. ஆயினும், சென்ற வருடத்தின் ரபீ பருவத்தில் 2.23 இலட்சம் எக்டர்கள் பயிரிடப்பட்டதாக இவ்வமைப்பு அறிவித்துள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வேளாண் துறையின் படி, 2016 ஆம் ஆண்டு இந்தியாவில் சூரியகாந்தி 5 லட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 4.5 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. சூரியகாந்தி விதை உற்பத்தியில் கர்நாடகா முதலிடம் வகிக்கின்றது. இதனை தொடர்ந்து ஆந்திர பிரதேசம், ஒடிசா, மேற்கு வங்காளம் மற்றும் மகாராஷ்டிரா உள்ளது. தமிழ்நாட்டில் கரூர், தூத்துக்குடி, விருதுநகர், திண்டுக்கல், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் பயிரிடப்படுகின்றது.

சமையல் எண்ணெயின் தனிநபர் நுகர்வு அதிகரித்துக் கொண்டே வருவதால் இந்தியா வருடத்திற்கு 7-8 இலட்சம் டன்கள் அதிகளவு சமையல் எண்ணெயை இறக்குமதி செய்கிறது. இந்தியாவின் எண்ணெய் பிழிதல் அமைப்பின்படி, நவம்பர் 2016-ல் 1.5 லட்சம் டன்கள் சூரியகாந்தி கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

வர்த்தக மூலங்களின் படி, தமிழ்நாட்டில் துறையூர், முசிறி, கோவில்பட்டி, விருதுநகர் மற்றும் ஈரோடு ஆகிய பகுதிகளில் வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததால் சூரியகாந்தியின் பரப்பளவு பெரிதும் குறைந்துள்ளது. ஆயினும், வரும் மாதத்தில் அரூர், பாப்பிரெட்டிபட்டி மற்றும் திருச்சியின் சில பகுதிகளில் சூரியகாந்தி பயிரிட வாய்ப்புள்ளது. கடந்த வருடங்களில் சூரியகாந்தி உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களிலும் பரப்பளவு கணிசமாக குறைந்துள்ளது. இருப்பினும், உக்கிரைன், அர்ஜென்டினா மற்றும் பிரேசிலிருந்து சூரியகாந்தி எண்ணெய் பெருமளவில் இறக்குமதி செய்வதால் சூரியகாந்தி விதையின் விலை நிலையாக இருக்கும்.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி

வரும் விலை முன்னறிவிப்பு திட்டம் கடந்த 16 ஆண்டுகளாக வெள்ளகோயில் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் நிலவிய சூரியகாந்தி விதையின் விலையை ஆய்வு செய்து, சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் தரமான சூரியகாந்தி விதையின் பண்ணை விலை பிப்ரவரி – மார்ச், 2017 மாதங்களில் குவிண்டாலுக்கு ரூ. 3,300 – 3,400 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விவசாயிகள் தங்கள் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி - 0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
எண்ணெய் வித்துக்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-2450812